# 7th Social Science Lesson 9 Questions in Tamil - குடிமையியல்

## 1. சமத்துவம்

1. "சமத்துவம் என்பது சமமாக நடத்துவது மட்டுமல்ல வெகுமதி அளிப்பதிலும் சமத்துவம் இருப்பதாகும். முதலாவதாக சமூக சிறப்புரிமை இல்லாததும் இரண்டாவதாக போதுமான வாய்ப்புகள் அனைவருக்கும் வழங்கப்படுவதும் ஆகும்." என்று கூறியவர்

A) ஜவஹர்லால் நேரு

B) ஆபிரகாம் லிங்கன்

C) பேராசிரியர் லாஸ்கி

D) அம்பேத்கர்

2. மக்களாட்சிக் கோட்பாடுகளான சுதந்திரம், சமத்துவம் ஆகியவை ____________ இன் அடிப்படையில் நடைமுறைப்படுத்தப்படும் போது மட்டுமே பொருளுடயவையாக இருக்கும்.

A) திறன்

B) வலிமை

C) எண்ணம்

D) நீதி

3. அனைத்து குடிமக்களும் சம தகுதியை அடைய உரிமை கொண்டவர்கள் என்பதே _____________சமத்துவம் ஆகும்.

A) குடிமை சமத்துவம்

B) சமூக சமத்துவம்

C) அரசியல் சமத்துவம்

D) பாலின சமத்துவம்

4. அனைத்து குடிமக்களும் குடியியல் உரிமைகளை அடைதல் வேண்டும் என்பதே ____________ சமத்துவம் ஆகும்.

A) குடிமை சமத்துவம்

B) சமூக சமத்துவம்

C) அரசியல் சமத்துவம்

D) பாலின சமத்துவம்

5. கூற்று 1: சமத்துவ உரிமைகள் அனைவருக்கும் கிடைக்கச் செய்வதோடு எந்த உரிமையும் எவருக்கும் மறுக்கப்படுதல் கூடாது.

கூற்று 2: இங்கிலாந்தில் சட்டத்தின் ஆட்சி என்ற கோட்பாடு உள்ளது.

A) கூற்று 1 சரி, கூற்று 2 தவறு

B) கூற்று 1 தவறு, கூற்று 2 சரி

C) கூற்று 1, கூற்று 2 இரண்டும் சரி

D) கூற்று 1, கூற்று 2 இரண்டும் தவறு

6. சட்டத்தின் ஆட்சி என்ற பதத்தை ____________ என்பவர் முதன்முதலில் வாதுரைத்தார்.

A) பேராசிரியர் லாஸ்கி

B) ஏ.வி.டைசி

C) வில்லியம் மில்லர்

B) அம்பேத்கர்

7. கீழ்க்கண்டவற்றுள் அரசியல் உரிமை அல்லாதது எது?

A) வாக்களிக்கும் உரிமை

B) பொது அலுவலகத்தில் பங்குகொள்ளும் உரிமை

C) அரசை விமர்சனம் செய்யும் உரிமை

D) அனைவருக்கும் சட்டத்தின்படி சமமான பாதுகாப்பு

8. குடிமக்கள் அனைவரும் அரசியல் வாழ்வில் தீவிரமாக பங்கெடுப்பதற்கு சமமான வாய்ப்பினை பெற்றிருத்தல் வேண்டும் என்ற உரிமை _____________ என்பதன் அடிப்படையில் மக்களுக்கு கிடைக்கின்றது.

A) அரசியல் கட்சி தொடங்குதல்

B) கூட்டம் கூடுதல்

C) அனைவருக்கும் வாக்குரிமை

D) பேச்சுரிமை

9. பொது வேலைவாய்ப்பில் அனைவருக்கும் சமவாய்ப்பு அளிக்கும் சட்டப்பிரிவு __________.

A) 14

B) 15

C) 16

D) 17

10. ____________ ஆண்டு நடைபெற்ற பொதுத்தேர்தலில் இந்தியாவில் பெண்களுக்கு வாக்குரிமை அளிக்கப்பட்டது.

A) 1951

B) 1952

C) 1953

D) 1956

11. சுவிட்சர்லாந்து நாட்டில் ___________ ஆண்டில் பெண்களுக்கு வாக்குரிமை அளிக்கப்பட்டது.

A) 1961

B) 1967

C) 1971

D) 1979

12. இந்தியாவில் __________ வயது பூர்த்தி அடைந்த எவரும் தேர்தலில் போட்டியிடலாம்.

A) 25

B) 27

C) 31

D) 35

13. பெண்களை மேம்படுத்தும் விதமாக உள்ளாட்சி அமைப்புகளில் __________ சதவீத இடஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளது.

A) 25%

B) 33%

C) 45%

D) 50%

14. பாலின சமத்துவம் என்பது பெண்கள், ஆண்கள் சிறுவர், சிறுமியர் ஆகியோர் சமமான உரிமைகள் வாய்ப்புகள் பெற வேண்டும் என்று கூறுவதோடு அவர்கள் ஒன்று போல நடத்தப்பட வேண்டும் என ___________ கூறுகிறது.

A) WHO

B) UNESCO

C) UNICEF

D) UNDP

15. 2017ஆம் ஆண்டில் நிலையான மேம்பாட்டிற்கான குறிக்கோள்களில் பாலின சமத்துவம் என்பது எத்தனையாவதாக குறிப்பிடப்பட்டுள்ளது?

A) 2

B) 3

C) 4

D) 5

16. ____________ நூற்றாண்டிலிருந்து பெண்களின் முன்னேற்றத்திற்காக பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

A) 17

B) 18

C) 19

D) 20

17. மனித மாண்பு என்பது __________ ஆகும்.

A) சுதந்திரம்

B) சமத்துவம்

C) சுய மரியாதை

D) வாய்ப்பு

18. அனைத்து தனி மனிதர்களும் கல்வியினை பெறுவதற்கு ___________ ஐ கொண்டிருத்தல் வேண்டும்.

A) மாண்பு

B) செல்வம்

C) சமத்துவம்

D) வாய்ப்புகள்

19. இந்திய அரசியலமைப்பு குடிமக்களுக்கு அரசியலமைப்பு சட்டப்பிரிவுகள் ___________ மூலம் சமத்துவத்தை அளிக்கிறது.

A) 12–14

B) 13–18

C) 14–18

D) 15–18

20. சட்டத்தின் முன் அனைவரும் சமம் மற்றும் அனைவருக்கும் சட்டத்தின்படி சமமான பாதுகாப்பு என்பது அரசியலமைப்பு சட்டப்பிரிவு __________இல் மேலும் வலிமைபடுத்தப்பட்டுள்ளது.

A) 18

B) 19

C) 20

D) 21

21. பட்டங்கள் அளித்து வேறுபடுத்துதலை தடை செய்யும் சட்டப்பிரிவு _________.

A) 14

B) 15

C) 18

D) 19

22. தவறான இணையைத் தேர்ந்தெடு.

1. சட்டப்பிரிவு 14 – தனிமனித உரிமை

2. சட்டப்பிரிவு 15 – பாகுபாட்டை தடை செய்கிறது.

3. சட்டப்பிரிவு 17 – தீண்டாமையை ஒழிக்கிறது.

A) 1, 2 தவறு

B) 3 மட்டும் தவறு

C) 1 மட்டும் தவறு

D) 2 மட்டும் தவறு

23. சமத்துவத்தை மேம்படுத்தும் வழிகளில் சரியானதை தேர்ந்தெடு.

1. அனைவரையும் நியாயமாக நடத்துதல் மற்றும் கல்வி

2. அனைவரையும் உள்ளடக்கிய ஒரு பண்பாட்டினை உருவாக்குதல்.

3. வாய்ப்புகள் அனைவரும் பெறுவதை உறுதிப்படுத்துதல்.

4. முழு ஆற்றலையும் மேம்படுத்த ஊக்குவித்தல்

5. சட்டம் மற்றும் கொள்கைகளை வகுத்தல்.

A) 1, 3, 5

B) 2, 4, 5

C) 1, 3, 4

D) அனைத்தும்

24. கீழ்க்கண்டவற்றுள் மக்களாட்சியின் தூண்கள் எவை?

1. தீண்டாமை

2. சமத்துவம்

3. நீதி

4. பாகுபாடு

A) 1, 2

B) 2, 3

C) 2, 3, 4

D) 1, 4

25. சமூகம் நல்ல முறையில் இயங்குவதற்கு ________ ஒரு முக்கியமான கோட்பாடாகும்.

A) சட்டம்

B) சம வேலைவாய்ப்பு

C) சமத்துவம்

D) சுதந்திரம்

26. பின்வருவனவற்றுள் எது சமத்துவத்தின் கீழ் வருவதில்லை?

A) பிறப்பு, சாதி, மதம், இனம், நிறம், பாலினம் அடிப்படையில் பாகுபாடு இன்மை

B) தேர்தலில் போட்டியிடும் உரிமை

C) அனைவரும் சட்டத்தின் முன் சமமாக நடத்தப்படுதல்

D) பணக்காரர்கள் மற்றும் ஏழைகள் இடையில் சமத்துவமின்மையைக் காட்டுதல்

27. கீழ்க்கண்டவைகளில் எது அரசியல் சமத்துவம் ஆகும்?

A) அரசாங்கத்திற்கு மனு செய்வது மற்றும் பொது கொள்கைகளை விமர்சிப்பது.

B) இனம், நிறம், பாலினம் மற்றும் சாதி அடிப்படையில் சமத்துவமின்மை அகற்றப்படுதல்.

C) சட்டத்தின் முன் அனைவரும் சமம்.

D) சட்டம் கைகளில் செல்வம் செறிவு தடுப்பு

28. சாதி, பணம், மதம் ஆகியவற்றின் அடிப்படையில் மனிதனால் உருவாக்கப்பட்ட சமத்துவமின்மை

A) இயற்கை சமத்துவமின்மை

B) மனிதனால் உருவாக்கப்பட்ட சமத்துவமின்மை

C) பொருளாதார சமத்துவமின்மை

D) பாலின சமத்துவமின்மை